SUB COURT LALGUDI RECEIVED 08 AUG 2022 SHERISTADAR

# இலால்குடி மாண்புமிகு சார்பு நீதிமன்றம்,

O.S.NO.266/2018

ம.பாலசுப்ரமணியன் -- வாதி

எதிர்

தங்கராஜ் மற்றும் மூவர் ...பிரதிவாதிகள்

## பி.வா.சா.1 சத்தியபிரமாணத்தின் பேரில் அளிக்கும் முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆங்கரை கிராமம், எண்.100/22F, 8-வது வளைவு, தெற்கு காமராஜ் தெருவில் வசித்துவரும் லேட்.சங்கிலிமுத்து மகன் ச.பரமசிவம், வயது 58 ஆகிய நான் சத்தியபிரமாணத்தின் பேரில் அளிக்கும் முன்விசாரணை நிரூபண வாக்குமூலம் என்னவென்றால்:-

1. நான் இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி. வழக்குப் பற்றிய விவரம் எனக்கு தெரியும். 1 மற்றும் 3ம் பிரதிவாதிகள் எனது உடன்பிறந்த சகோதரர்கள். 4 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் எனது உடன்பிறந்த சகோதரிகள் ஆவார்கள்.

2. இவ்வழககானது, பொய்யும், புரட்டும் நிறைந்த அற்பமானது என்பது வாதிக்கு நன்றாக தெரியும்.

3. இவ்வழக்கின் பத்தி 5ல் எங்களுக்கும், வாதிக்கும் இடையில் கடந்த 25.06.2012ம் தேதியன்று வாய்மொழி கிரைய ஒப்பந்தம் ஏற்றப்பட்டது என்றும், அதற்கு பிரதிவாதிகள் சம்மதம் தெரிவித்தனர் என்பதும் பொய்யானதாகும். அதே போன்று, 2 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் கிரைய ஒப்பந்தத்தில் கையொப்பமிட மறுத்தார்கள் என்பது முற்றிலும் பொய்யானதாகும். இதை பிரதிவாதிகள் முற்றிலும் மறுக்கின்றனர்.

4. உண்மையில் பிரதிவாதிகளின் தாயார் கடந்த 28.07.2013ம் தேதியன்று இறந்து விட்டார். ஆனால் 30ம் நாள் காரியத்தின்போது மீதி கிரையத் தொகையான ரூ.95,000/-த்தினை பெற்றுக் கொண்டு கிரையப்பத்திரம் எழுதிக் கொடுப்பதாக பிரதிவாதிகள் ஒப்புக் கொண்டதாக கூறுவது பொய்யானதாகும். மேற்படி இப்பிரதிவாதிகள் வழக்குப் பத்தி 6-ல் வாதியை சுவாதீனத்திலிருந்து வெளியேற்ற முயற்சித்ததாக கூறுவது பொய் ஆகும். அதே போல் வாதி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 2 விதி 2ன்படி

SUB JUDGE'S COURT, LALGUDI
RECEIVED
0 8 AUG 2022



அசல் வழக்கு எண்.381/2013 இலால்குடி உரிமையியல் நீதிமன்றத்தில் ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் வேண்டி அனுமதி பெற்றதாக கூறுவது மறுக்கப்படுகின்றது. மேற்படி வழக்கு கடந்த 22.02.2017ம் தேதியன்று வருகை தவறுக்காக தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. மேற்படி இவ்வழக்கு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 2 விதி 2 தடையால் பாதிக்கப்பட்டுள்ளது.

5. வாதி, அ.வ.எண்.381/2013 இலால்குடி உரிமையியல் நீதிமன்றத்திலல் தாக்கல் செய்த பிறகு இப்பிரதிவாதிகள் அ.வ.எண்.38/2014 சுவாதீன பரிகாரம் கேட்டு, நானும், எனது உடன்பிறந்தோரும் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அது இதுநாள் வரை நிலுவையில் உள்ளது. அதன்பின் வாதி 2 வருடங்கள் கழித்து கிரைய ஒப்பந்தப்படி கிரையம் செய்து தரும்படி கடந்த 03.02.2016ம் தேதியன்று வழக்கறிஞரி அறிவிப்பு கொடுத்தார். அதற்கு 13.02.2016ம் தேதியில் வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளோம்.

6. வாதி வழக்குரையில் பரிகார கால தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. கிரைய ஒப்பந்த தேதி 25.06.2012ன்படி கால அவகாசம் 6 மாதங்களாகும். காலதாமத சட்டப்பிரிவு 54ன்படி வாதியின் 24.12.2015ம் தேதியன்று முடிவடைகிறது. வாதி நாவா தாக்கல் செய்தது 2016 ஆகும். வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. மேற்படி வழக்கு பிரதிவாதிகளை மிரட்டி அலைக்கழிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கிற்கு எந்தவித முகாந்திரமுமின்றி நீதிமன்றத்தில் பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நல்லெண்ணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்படவில்லை.

எனவே கனம் நீதிமன்றம், வாதியின் வழக்கினை தள்ளுபடி செய்யுமாறு பணிவன்புடன் பிரார்த்திக்கிறேன்.

மேலே கூறியுள்ள சங்கதிகள் யாவும் உண்மையென
உறுதி கூறி லால்குடியில் இன்று 08/08/2022
என் முன்பாக கையொப்பமிட்டார்.

## ஆவணப்பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. 11.07.1967 | கிரைய பத்திரம் | அசல் |